உத்திரமேரூர், புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் அ.சுகுமாரன் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு :

- 2024–2025 ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலை பட்டப்படிப்புகளுக்கான முதற்கட்ட கலந்தாய்வில் 231 மாணவர்கள் இக்கல்லூரியில் சேர்ந்தனர். மீதம் உள்ள இடங்களுக்கு இரண்டாம் கட்ட கலந்தாய்வு ஜுன் 26 முதல் ஜுன் 28 வரை நடைபெறவுள்ளது. இக்கலந்தாய்வில் பிசி, பிசிஎம்(முஸ்லீம்), எஸ்சிஏ, எஸ்டி பிரிவைச் சேர்ந்த இக்கல்லூரிக்கு விண்ணப்பித்த மாணவ, மாணவிகள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

- 26.06.2024 புதன் அன்று அறிவியல் பாடப்பிரிவுகளான B.SC கணிதம், கணினி அறிவியல், இயற்பியல், வேதியியல் ஆகியவற்றிற்கு கலந்தாய்வு நடைபெறவுள்ளது. இக்கலந்தாய்வில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தகுதி மதிப்பெண் 220க்கு மேல், ஆதி திராவிடர் வகுப்பினரின் தகுதி மதிப்பெண் 225க்கு மேல் மற்ற வகுப்பினர் பிரிவில் விண்ணப்பித்த அனைவரும் கலந்து கொள்ளலாம்.

- 27.06.2024 வியாழன்அன்று பி.காம் மற்றும் பி.ஏ. பொருளியல் டாடப்பிரிவுகளுக்கு கலந்தாய்வு நடைபெறவுள்ளது. இக்கலந்தாய்வில் B.A பொருளியல் சேர மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மாணவருக்கு குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் முறையே 242, 244 ஆகும். பிற வகுப்பினர் பிரிவில் விண்ணப்பித்த அனைவரும் கலந்து கொள்ளலாம்.

- 28.06.2024 வெள்ளி அன்று பி.ஏ தமிழ், ஆங்கிலம் பாடப்பிரிவுகளுக்கு சேர்க்கை கலந்தாய்வு நடைபெறவுள்ளது. B.A ஆங்கிலம் சேர விரும்பும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மாணவர்களுக்கு தகுதி மதிப்பெண் ஆங்கில பாடத்தில் 41 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருக்க வேண்டும். பிற வகுப்பினர் பிரிவில் விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் இக்கலந்தாய்வில் பங்கு பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் விவரங்களுக்கு www.gascuthiramerur.ac.in என்ற கல்லூரியின் இணையதளத்தினை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கல்லூரி முதல்வர்